**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) | |
| | : | Prosecution - | **PW-5** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | |
|---|---|---|---|
| Name | : செந்தில்குமார் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 18th day of October 2023.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது அரவக்குறிச்சி வட்டாட்சியர் அலுவலகத்தில், வட்டாட்சியராக பணிபுரிகிறேன். கடந்த 2020 ம் வருடம் கரூர் வட்டாட்சியராக பணிபுரிந்தபோது, கடந்த 05.10.2020 அன்று கரூர், காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தின்படி, விசாரணை மேற்கொண்டு, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வருவாய் ஆய்வாளர் ஆகியோரின் அறிக்கையை பெற்று, அதன் அடிப்படையில், 16.10.2020 அன்று கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன், த/பெ. முனியப்பன், அண்ணா நகர், எல்.என்.எஸ். கிராமம் என்பவர் இந்து, பள்ளர் பட்டியல் சாதியை சேர்ந்தவர் என்று சாதிச்சான்றிதழ் வழங்கினேன். அந்த சாதிச்சான்றிதழ் அ.சா.ஆ.7.

அதே தேதியில், R.S.மணி (எ) மணிகண்டன், த/பெ. ரவி, பிரம்மதீர்த்தம் ரோடு, தலைமை அஞ்சலகம், எல்.என்.எஸ்.கிராமம் என்பவர் இந்து, முத்துராஜா, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என்று சாதிச்சான்றிதழ் வழங்கினேன். அந்த சாதிச்சான்றிதழ் அ.சா.ஆ.8.

27.10.2020 அன்று, செந்தில் (எ) செந்திலீஸ்வரன், த/பெ. சண்முகம், சின்னாண்டாங்கோவில், திருப்பதி லேஅவுட் என்பவர்,இந்து, தெலுங்குப்பட்டி செட்டி, மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என்று சாதிச்சான்றிதழ் வழங்கினேன். அது அ.சா.ஆ.9.

01.12.2020 அன்று, பாண்டி (எ) துரைப்பாண்டி, பிரம்மதீர்த்தம் ரோடு, தலைமை அஞ்சலகம், எல்.என்.எஸ்.கிராமம் என்பவர் இந்து, மறவர், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என்று சாதிச்சான்று அறிக்கை வழங்கினேன். அது அ.சா.ஆ.10.

19.12.2020 அன்று, ரமேஷ் (எ) காவியா ரமேஷ், த/பெ. பாலசுப்பிரமணியம் என்பவரின் தகப்பனார் மலையாளி நாயர் வகுப்பைச்சேர்ந்தவர் என்றும், அவரது தாயார், இந்து, கொங்கு வெள்ளாளர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என்றும், அறிக்கை வழங்கினேன். அது அ.சா.ஆ.11.

இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி பாண்டி (எ) துரைப்பாண்டி என்பவருக்கு தகப்பனார் பெயர் என்னுடைய அறிக்கையில் குறிப்பிடவில்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,<br>
மாவட்ட அமர்வு நீதிபதி,<br>
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | | |
|---|---|---|---|---|
| SPL.Sessions Case No. | : | 11/2023 (Mother Case S.C.No. 17/2021) | | |
| | : | Prosecution | - | **PW-6** |
| Deposition of witness for | : | Defense | | |

| | | | |
|---|---|---|---|
| Name | : கண்ணன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1872 of the 18th day of October 2023.

(எதிரி பிரேம்குமார் ஆஜர்)

**முதல் விசாரணை**

நான் தற்போது மாவட்ட வழங்கல் பறக்கும்படை வட்டாட்சியராக பணிபுரிகிறேன். கடந்த 07.11.2020 அன்று மண்மங்கலம் வட்டாட்சியராக பணிபுரிந்தபோது, கரூர், காவல்துணை கண்காணிப்பாளர் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தின்அடிப்படையில், கிருஷ்ணமூர்த்தி, த/பெ. குணசேகரன், சின்னாண்டாங்கோவில், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் என்பவர் இந்து, பள்ளர் பட்டியல் வகுப்பைச்சேர்ந்தவர் என சாதிச்சான்று அறிக்கை வழங்கினேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.12.

அதே தேதியில், திருமதி.சஷ்மிதா, க/பெ. கிருஷ்ணமூர்த்தி சின்னாண்டாங்கோவில், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் என்பவர் இந்து, நாடார் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என சாதிச்சான்று அறிக்கை வழங்கினேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.13.

அதே தேதியில், அரவிந்த் (எ) அரவிந்த்குமார், த/பெ. ராமஜெயம், ஸ்ரீபாரி நகர், அருகம்பாளையம், காதப்பாறை அஞ்சல், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் என்பவர் இந்து, கள்ளர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர் என சாதிச்சான்று அறிக்கை வழங்கினேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.14

அதே தேதியில், கேசவன், த/பெ. ரவிச்சந்திரன், நெ. 924, பேங்க் வையாபுரிபுரம், சின்னாண்டாங்கோவில், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் என்பவர் இந்து, சோழிய வெள்ளார், பிற்படுத்தப்பட்ட வகுப்பைச்சேர்ந்தவர் என மண்டல துணை வட்டாட்சியர் சாதிச்சான்று அறிக்கை வழங்கினார். அதை நான் காவல்துணை கண்காணிப்பாளரக்கு அனுப்பி வைத்தேன். அந்த அறிக்கை அ.சா.ஆ.15.

இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கேசவன் என்பவருக்கு மண்டல துணை வட்டாட்சியர் சாதிச்சான்று அறிக்கை வழங்கினார் என்பதை நான் போலீசார் விசாரணையில் சொன்னேன். அரவிந்தன் என்பவருக்கு நான் சாதிச்சான்றிதழ் வழங்கவில்லை. மண்டல துணை வட்டாட்சியர் சாதிச்சான்று வழங்கினார். கேசவன், அரவிந்த்குமார் ஆகியோருக்கு நான் சாதிச்சான்றிதழ் வழங்குவதற்கு எனக்கு அதிகாரம் இல்லை என்றால் சரியல்ல. நான் கேசவன், அரவிந்த்குமார் ஆகியோருக்கு நான் சாதிச்சான்றிதழ் வழங்கவில்லை என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

ஒம்/.ஆர்.சண்முகசுந்தரம்,
மாவட்ட அமர்வு நீதிபதி,
கரூர்.